2009 ஜூலை 20]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கபில் சிபல் அவர்களைச் சந்தித்தபொழுது, நாங்கள் வைத்த கோரிக்கையே அதுதான். மற்ற தனியார் கல்லூரிகளிலே இருப்பதைப்போல, இதுபோன்ற பல்கலைக்கழகங்களிலேயும், 65 சதவிகித இடங்கள் அரசுத் தரப்பிலே நிரப்பப்பட வேண்டும்; அரசு எந்தக் கட்டணத்தை நிர்ணயிக்கிறதோ, அந்தக் கட்டணத்தைத்தான் அவர்கள் வசூலிக்க வேண்டுமென்று சொன்னோம். இப்பொழுதுகூட அவர்கள், கட்டணத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்களே தவிர, 65 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பற்றி அதில் சொன்னதாகத் தெரியவில்லை. ஆகவே, இப்போது அவர்கள் தமிழ்நாட்டிற்கே வருகிறார்கள். அப்போது அவர்களை மீண்டும் சந்தித்து, இதில் தெளிவான முடிவுகள் எடுக்கப்பட்ட பிறகு, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த கல்வியாண்டிலாவது நிறைவேற்றுவதற்கு இந்த அரசு நிச்சயம் நடவடிக்கைகளை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

173—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***57584—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

திருவிடைமருதூர் பகுதியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கும்பகோணத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்கி வருவதால், திருவிடைமருதூர் தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2009 ஜுலை 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

முற்பகல் 9-50

வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

கால்நடை துணை மருந்தகம்

***9998—திரு. அ. சின்னசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பாஸ்மார்பெண்டாவில் கால்நடை துணை மருந்தகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்ட கேள்வி. அரவட்லா ஊராட்சியில், அரவட்லா பகுதியிலேயே கால்நடை கிளை நிலையம் தொடங்கப்பட்டு, அது சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. அதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்